தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழைக்கு நிலையான விலை இருக்கும்

வாழையின் விலை முன்னறிவிப்பை விவசாயிகளுக்கு தெரிவிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் முக்கிய வாழை ரகங்களான பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழையின் விலை முன்னறிவிப்புகளை வெளியிடுகின்றது.

**பூவன்**

இது தென்மாநில மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் முன்னணி ரகமாக விளங்குகிறது. பெரும்பாலும் நீண்ட காலப்பயிராக நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றுள் தமிழ்நாட்டின் சீதோஷ்ண மற்றும் மண் காரணிகள் ஏதுவாக இருப்பதால் தமிழ்நாடு உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது. மேலும், இந்த ரகமானது இலைக்காகவும் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது.

கோயம்புத்தூர் காந்திபார்கில் உள்ள குமரன் வாழை தரகு சந்தையில் பூவன் வரத்து எதிர்பார்த்ததை போல தேவைக்கு ஏற்ப உள்ளது. மேலும் இவற்றின் பண்டிகை கால, குறிப்பாக விஜய தசமி மற்றும் தைப்பொங்கல் தேவை அதிகரிப்பு காலங்களை தவிர வருடம் முழுவதும் இவற்றிற்க்கு எப்போதும் நிலையான தேவை உள்ளது. தற்போது இவற்றின் மொத்த விலை கிலோவிற்கு ரூபாய் 30 ஆக உள்ளது.

**கற்பூரவள்ளி**

இது புகழ் பெற்ற கனி வகையாகும். இவை பெரும்பான்மையாக தமிழ்நாட்டின் மத்திய மற்றும் தென் மாவட்டங்கள் மற்றும் கேரள மாநிலத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. இது குறுநில விவசாயத்திற்கு ஏற்றதாக உள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து வாழை ரகங்களைக் காட்டிலும் அதிக இனிப்புத் தன்மை கொண்டது. பருவநிலை மாற்றத்தின் காரணமாக சில சமயங்களில் இவற்றுள் விதை காணப்படும். இதன் பழம் பொன் மஞ்சள் நிறத்தில் சாம்பல் பூச்சுடன் காணப்படும். இந்த ரகம் வாடல் நோய் தாக்குதலுக்கு

எளிதில் பாதிக்கப்படும் தன்மை கொண்டது. மேலும் இலைப்புள்ளி நோய்க்கு எதிரான தாங்கு திறன் மற்றும் வறட்சிக்கு உகந்ததாக உப்பு பாதிக்கப்ட்ட பகுதிகளுக்கு ஏற்றது.

கோயம்புத்தூர் காந்திபார்கில் உள்ள குமரன் வாழை தரகு சந்தையில் வருடம் முழுவதும் நிலையான வரத்து உள்ளது. வர்த்தக மூலங்களின் கூற்றுபடி தற்போதும் அதே நிலை நீடிக்கிறது. அதனால் தூத்துக்குடி, திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிலையான விலையில் விற்பனை ஆகிறது. தற்போது இவற்றின் மொத்த விலை கிலோவிற்கு ரூபாய் 30 ஆக உள்ளது.

**நேந்திரன்**

இது கேரளத்தின் பழம் மற்றும் உணவு வகைகளுக்கு மிகப் பிரபலமான ரகம். கடந்த சில வருடங்களில் இவற்றின் சாகுபடி தமிழ்நாட்டில் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இவை வாழை மடல் தேமல் வைரஸ் நோய், நூற்புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதலுக்கு எளிதில் ஆளாகும். தற்போது இவற்றின் மொத்த விலை கிலோவிற்கு ரூபாய் 45 ஆக உள்ளது.

கோயம்புத்தூர் மொத்த சந்தையில் எதிர்வரும் ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 12 வருடங்களின் பூவன் மற்றும் கற்பூரவள்ளி, கடந்த ஏழு வருடங்களின் நேந்திரன் ரகங்களின் கோயம்புத்தூர் உழவர் சந்தையில் நிலவிய விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தக மூலங்கள் மற்றும் விலை ஆய்வுகளின் முடிவின்படி எதிர்வரும் ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் சராசரி பண்ணை விலையானது அறுவடை சமயத்தில் பூவன் வாழை கிலோவிற்கு ரூபாய் 24 முதல் 27 வரையும், கற்பூரவள்ளி கிலோவிற்கு ரூபாய் 23 முதல் 25 வரையும் மற்றும் நேந்திரன் ரகத்திற்கு கிலோவிற்கு ரூபாய் 30 முதல் 35 வரையும் கோயம்புத்தூர் மொத்த சந்தையில் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு விவசாயிகள் அறுவடைக்கு முன்பு சந்தை விலை நிலவரங்களை அறிந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ள**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பழப்பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611269

மக்கள் தொடர்பு அலுவலர்